# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2006 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (பதவிப்பெயர் மாற்றம்) சட்டம்

*(2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2006, பெப்புருவரி மாதம் 17 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2006 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (பதவிப் பெயர் மாற்றம்) சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச. வ. ஓ. 35/2005*

**வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளரின் பதவிப்பெயரை மாற்றுவதற்கும், விளைவாந்தன்மையினவான எழுத்திலான சட்டத்தில் அத்தகைய திருத்தங்களைச் செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (பதவிப் பெயர் மாற்றச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து—

(அ) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் வேறெல்லா இடங்களிலும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்படும், செய்யப்படும், தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் அறிவித்தலில், தொடர்பாடலில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில்,

“வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர்” என்பது காணப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், “வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி” என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்